

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்கள், காணொலி வாயிலாக திருச்சிராப்பள்ளி டி.வி.எஸ் டோல்கேட் அருகில் உலக தரத்திலான மாபெரும் பெருந்தலைவர் காமராஜர் நூலகம் மற்றும் அறிவுசார் மையத்திற்கு (21.03.2025) அடிக்கல் நாட்டி அதனைத் தொடர்ந்து மிக விரைவாக நடைபெற்று வரும் கட்டிடப் பணிகளை ஒவ்வொரு கட்டமாக தொடர்ந்து பள்ளிக்கல்வித்துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி. ஆய்வு செய்து ஆலோசனைகளை வழங்கி வருகின்றார். திருச்சிராப்பள்ளி, டிவி எஸ் டோல்கேட் பகுதியில் ரூபாய் 290 கோடி மதிப்பீட்டில் உலக தரத்திலான மாபெரும் பெருந்தலைவர் காமராஜர் நூலகம் மற்றும் அறிவுசார் மையம் அமைய உள்ளது. நிகழ்வின் போது மாநகரக் கழகச் செயலாளர் மு மதிவாணன் மற்றும் கட்டிட பொறியாளர்கள் அரசு உயர் அதிகாரிகள் வல்லுனர்கள் உடன். இருந்தனர்.



ஈரோடு தெற்கு மாவட்டம், சின்ன சேமூர் 8வது வார்டு அம்மன் நகரில் என்.ஆர்.கே.ராஜா, மாமன்ற உறுப்பினர் வழக்கறிஞர் இரா. ரமேஷ்குமார் ஆகியோர் ஏற்பாட்டில் பொது மக்களுக்கு குறைந்த விலையில் சேவைகள் வழங்கிட மக்கள் சேவை மையத்தை மாவட்ட கழக செயலாளரும், அமைச்சருமான சு.முத்துசாமி திறந்து வைத்தார். நிகழ்வில் ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், மாநகர கழக செயலாளர் மு.சுப்ரமணியன் துணை மேயர் வி.செல்வராஜ், , மண்டல தலைவர் மு.பா.சுப்பிரமணியன், மாமன்ற உறுப்பினர்கள் ஆதி ஸ்ரீதர், ஜெகநாதன், கௌசல்யா சிவகுமார், ஆ.ஜெகதீசன், வட்ட செயலாளர் கண்ணதாசன், முருகேசன், பாரதிராஜா, கோபாலகிருஷ்ணன், பிரபு, சுகந்தன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.



புதுக்கோட்டை மாவட்டம், திருவரங்குளம் ஊராட்சி ஒன்றியம், இம்முனாம்பட்டி ஊராட்சி ஒன்றிய நடுநிலைப்பள்ளியில் ரூ.35 லட்சம் மதிப்பீட்டில் 2 கூடுதல் வகுப்பறை கட்டடங்கள் கட்டுமான பணிகளுக்கு பிற்படுத்தப்பட்டோர் நலத்துறை அமைச்சர் சிவ.வீ.மெய்யநாதன். அடிக்கல் நாட்டினார்.



ஈரோடு மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைபெற்ற ஈரோடு தூய்மை மிஷன் – கழிவு சேகரிப்பு இயக்கம் தொடர்பான கலந்துரையாடல் நிகழ்ச்சியில் வீட்டுவசதி, நகர்புற வளர்ச்சி, மதுவிலக்கு மற்றும் ஆயத்தீர்வைத்துறை அமைச்சர் சு.முத்துசாமி, ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ், ஈரோடு மாவட்ட ஆட்சித்தலைவர் கந்தசாமி, மாநிலங்களவை உறுப்பினர் அந்தியூர்.ப.செல்வராஜ், ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார் ஆகியோர் கலந்து கொண்டு உறுதிமொழி ஏற்றனர். உடன் தூய்மை பணியாளர்கள் மற்றும் துறைச்சார்ந்த அதிகாரிகள் கலந்து கொண்டனர்.



தஞ்சை மத்திய மாவட்ட திமுக சார்பில் பேரறிஞர் அண்ணா அவர்களின் 117வது பிறந்த நாளை முன்னிட்டு தஞ்சாவூர் பழைய பேருந்து நிலையம் அருகில் உள்ள அண்ணா திருவுருவ சிலைக்கு மாவட்டக் கழகச் செயலாளர் துரை.சந்திரசேகரன் எம்.எல்.ஏ தலைமையில் கழக உயர்நிலை செயல்திட்டக்குழு உறுப்பினர் எஸ்.எஸ்.பழநிமாணிக்கம் ச.முரசொலி எம்.பி, டி.கே.ஜி.நீலமேகம் எம்.எல்.ஏ, தலைமை செயற்குழு உறுப்பினர் து.செல்வம், சி.இறைவன், தஞ்சை மாநகரச் செயலாளர் சண்.இராமநாதன், துணை மேயர் மரு.அஞ்சுகம் பூபதி உள்ளிட்ட மாவட்ட கழக நிர்வாகிகள் ஒன்றிய நகர பேரூர் செயலாளர்கள் கழக முன்னோடிகள் கலந்து கொண்டு மாலை அணிவித்து மரியாதை செய்தனர்.

## தமிழ் வளர்ச்சிக் கழகத்தின்–

# ‘சொல் புதிது’ எனும் திட்டத்தின்கீழ் 5வது கூட்டம்!

## முனைவர் ம.இராஜேந்திரன் தலைமையில் நடைபெற்றது!

சென்னை, செப். 22 - தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் ‘சொல் புதிது’ என்னும் திட்டத்தின் ஐந்தாவது கூட்டம் தமிழ் வளர்ச்சிக் கழக அலுவலகத்தில் 17.09.2025 முற்பகல் நடைபெற்றது.

இக்கூட்டத்திற்குத் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் தலைவர் முனைவர் ம. இராசேந்திரன் தலைமை தாங்கினார்.

இக்கூட்டத்தில் சிவாலயம் ஜெ. மோகன், பேராசிரியர்கள் வ. ஜெயதேவன், ஒப்பிலா மதிவாணன், பாரதிபாலன், சா. சரவணன், ஆ. மணவழகன், ம. இளங்கோவன், மற்றும் ராஜ் கண்ணன், மு. முருகேசன், முனைவர் அ. ஜேம்ஸ், ஆகியோர் கலந்துகொண்டனர்.

இக்கூட்டத்தில் பின்வரும் 54 சொற்கள் முடிவு செய்யப்பெற்றன.

1 ANPR camera-ஊர்தி எண் காணி, 2 Badge-அடையாள வில்லை , 3 CCTV camera -கண்காணி, 4 DSLR camera- எதிரொளிப் படக்கருவி, 5 Hawala- முறையிலாப் பரிமாற்றம், 6 Hot news- பரபரப்புச் செய்தி, 7 Infotainment - தகவல் போக்கு,8 Life style -வாழ்முறை, 9 Sport-தனி விளையாட்டு, 10. Game- விளையாட்டு / ஆட்டம்,

11.Match-போட்டி விளையாட்டு, 12. Tournament-காலநிலை விளையாட்டு, 13. Winner -வெற்றியாளர், 14 Runner -வெற்றி அண்மையர், 15 Champion -வாகையர், 16 Championship -வாகைநிலை, 17 Client-பயனி, 18 Customer-வாடிக்கையாளர், 19 Biopic-வாழ்க்கைப் படம், 20 Caravan vehicle-வசதி நிறை வண்டி, 21 Bonanza- அதிரடிப் பயன் 22 Trendy- புதுப்போக்கு, 23 Trendsetter -புதுப்போக்கு ஆக்குநர், 24 Chip -சில்லு, 25 Remake-மறு ஆக்கம், 26 Rubber stamp-ஒப்ப முத்திரை, 27 Real estate -நில வணிகம், 28 Grease- மசகு, 29 Dose-கண்டிப்பு, 30 Timeline-காலவரிசை, 31 First look-முதல் நோக்கு, 32 Lyric video-பாடல்வரிக் காட்சி, 33 First single-முதல் பாடல், 34 Gated community-காப்புக் குடியிருப்பு, 35 Academy-கலைக்கழகம்,

36 Cartoon-கருத்துப்படம், 37 Hydro carbon-ஆழ்நிலை நீர்மக் கரிமம், 38 Screen shot-திரைப் பதிவுப் படி, 39 Bumper prize-மாபெரும் பரிசு, 40 CAPTCHA-ஆளறிகுறி,

41 Showcase -காட்சிப் பேழை, 42 Biomining-நுண்ணுயிரி அகழ்வு, 43 Metacognition-மீ அறிதிறன், 44 QR code-விரைவு வினைக் குறி,

45 Hologram-முப்பரிமாண ஒளிப்படம், 46 Bonhomie-நற்பண்பு, 47 Omelette-முட்டை அடை, 48 Half boiled egg-முட்டை அப்பம், 49 Fried rice-பொரி சோறு, 50 Heartin Idly-இதய வடிவ இட்லி, 51 Tetra pack- நாலடுக்குப் பொதி / நாலடுக்குக் கட்டகம்,52 Risk- இடர், 53 Rusk-உலர் ரொட்டி, 54 Chain smoker -தொடர் புகையர்

இவ்வாறு தமிழ் வளர்ச்சிக் கழகம் அறிவித்துள்ளது.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### ஆயிரம்விளக்கு மு. நடராசன்
### செப்டம்பர் 22 (2004)



இளமைப் பருவத்திலேயே கழகத்தில் இணைந்து பணியாற்றியவர்.

ஆயிரம்விளக்கு பகுதியில் இருபத்தைந்து ஆண்டுகள் வட்டக் கழகச் செயலாளராகவும், பத்து ஆண்டுகள் பகுதிக் கழகச் செயலாளராகவும், மத்திய சென்னை மாவட்ட துணைச் செயலாளராகவும், தென்சென்னை மாவட்டப் பொருளாளராகவும் பணியாற்றியவர்.

கழகம் அறிவித்த போராட்டங்களில் பங்கேற்று சிறை சென்றவர்.

சென்னை மாநகராட்சி 110வது வார்டு கவுன்சிலராக இருமுறையும், மண்டலக்குழுத் தலைவராகவும் தேர்ந்தெடுக்கப்பட்டு, அப்பகுதி மக்களுக்கு தேவையான அடிப்படை வசதிகளை செய்து கொடுத்து, அவர்களின் நன்மதிப்பைப் பெற்றவர்.

இவரது பணியினை பாராட்டும் வகையில் தலைவர் கலைஞர் அவர்களிடம் இருமுறை கணையாழி பெற்றவர்.

தலைமைக் கழகம்
தி.மு.க.



தந்தை பெரியார் அவர்களின் 147 வது பிறந்த நாளையொட்டி கிருஷ்ணகிரி கிழக்கு மாவட்டச் செயலாளர், தே.மதியழகன் எம்.எல்.ஏ. தலைமையில் தந்தை பெரியார் அவர்களின் திருவுருவப் படத்திற்கு மாலை அணிவித்து மலர் தூவி மரியாதை செலுத்தப்பட்டது. இந்நிகழ்ச்சியில் மாவட்ட அவைத் தலைவர் நாகராஜ், பொருளாளர் கதிரவன், தலைமைச் செயற்குழு உறுப்பினர் கிருபாகரன் , பொதுக்குழு உறுப்பினர் நாகராசன் , நகர பொறுப்பாளர்கள் அஸ்லாம், வேல்மணி ஒன்றிய செயலாளர் சரவணன், மாவட்ட செய்தி தொடர்பாளர் சீனிவாசன், இளைஞர் அணி அமைப்பாளர் தினேஷ் ராஜன் உள்ளிட்டோர் உள்ளனர்.



தந்தை பெரியார் அவர்களின் 147 வது பிறந்த நாளை முன்னிட்டு நாகை கோட்டைவாசலில் உள்ள தந்தை பெரியார் சிலைக்கு நாகை மாவட்டக் கழகச் செயலாளர் என்.கௌதமன் தலைமையில் மாலை அணிவித்து மரியாதை செலுத்தப்பட்டது. உடன் தலைமைச் செயற்குழு உறுப்பினர் இல.மேகநாதன், மாவட்ட இலக்கிய அணி அமைப்பாளர் இரா. முருகையன், திராவிடக் கழக மாவட்டச் செயலாளர் ஜெ. புகேஷ்குப்தா, மாவட்டத்தலைவர் வி. எஸ்.டி.ஏ.நெப்போலியன், நகரத் தலைவர் செந்தில்குமார், பெரியார் தொண்டர் மாயகிருஷ்ணன், மு.க.ஜுவா, ம.தி.மு.க. நகர செயலாளர் சோழன், இரா.தங்கதுரை, நிஜாம் மற்றும் பலர் உள்ளனர்